Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 28.11.2024/Script.

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – மலர்விழி

தேதி 28.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் பாதுகாப்பு திறன்கள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்றும் இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

புதுச்சேரியில், தாகூர் அரசு கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள, தொல்பொருள் அருங்காட்சியகத்தை மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று திறந்து வைத்தார்.

வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வரும் 30-ஆம் தேதி காலை, காரைக்கால்-மகாபலிபுரம் இடையே, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

முர்மு

இந்தியாவின் பாதுகாப்பு திறன்கள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். இன்று ஊட்டி வெலிங்டனில், ராணுவ கல்லூரி நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், இந்தியாவில் இருந்து தரமான ஆயுதங்கள் மற்றும்

பாதுகாப்பு உபகரணங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் பாதுகாப்பு துறையில் உலக நாடுகளின் நம்பகமான கூட்டாளியாக இந்தியா திகழ்வதாகவும் கூறினார். சைபர் போர் முறை உள்ளிட்ட நவீன போர் முறைகளுக்கு ஏற்ற தொழில் நுட்பங்களை இந்தியா உருவாக்கி வருவதாகவும், இத்துறையில் இந்தியாவின் புதுமை படைப்புகளால் எதிர்கால சவால்களையும் சந்திக்க ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பு படையினர் நாட்டிற்கே முதலிடம் என்ற அடிப்படையில் சிறப்பாக சேவை புரிந்து வருவதாக குடியரசு தலைவர் கூறினார். பாதுகாப்பு துறையின் எல்லாப் பிரிவுகளும், வலுவான மகளிர் சக்தியுடன் செயல்பட்டு வருவது குறித்து அவர் பெருமிதம் வெளியிட்டார். சியாச்சின் போன்ற கடினமான மலைப் பகுதிகளிலும் பெண் பாதுகாப்பு படையினர் பணிபுரிந்து வருவதையும், பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த பெண் அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி பெற்று வருவதையும் அவர் சுட்டிக்காட்டி பாராட்டினார். அண்மையில் கோவாவில் நடைபெற்ற கடல்சார் விழாவின் போது துடிப்பான இளம் அக்னி வீரர்களை தாம் சந்தித்தது மகத்தான தருணம் என்றும் அவர் குறிப்பிட்டார். வெலிங்டன் ராணுவக் கல்லூரி நிகழ்ச்சிக்கு முன்பாக, கல்லூரி வளாகத்தில் உள்ள போர் வீரர் நினைவு சின்னத்தில் குடியரசு தலைவர் மலர் அஞ்சலி செலுத்தினார். கல்லூரியில் பயிற்சி பெற்று வரும் அதிகாரிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார். நாளைய தினம்

நீலகிரி பகுதியைச் சேர்ந்த பழங்குடி மக்களை குடியரசு தலைவர் சந்திக்கிறார். நாளை மறுநாள் சனிக்கிழமை திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தின பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர் தமிழக பயணத்தை முடித்துக் கொண்டு, அவர் புதுடெல்லி திரும்புவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*நாடாளுமன்றம்*

தனியார் தொழில் குழுமம் ஒன்றுக்கு எதிரான லஞ்ச ஊழல் புகார்கள் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பாக எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளும், இன்றும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. அலுவல்கள் தடை படுவதால் ஜனநாயகத்தின் அஸ்திவாரமே வலுவிழப்பதாக, அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் அவையில் கூறினார். மக்களவையிலும் அலுவல்கள் முதலில் 12 மணி வரையிலும் பின்னர் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. காங்கிரஸ் மற்றும் இதர எதிர்கட்சிகள் தேவையற்ற முறையில் அமளியில் ஈடுபடுவதாகவும், புதிய உறுப்பினர்கள் கருத்து வெளியிடுவதைக் கூட எதிர்கட்சிகள் அனுமதிக்கவில்லை என்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறினார். முன்னதாக காங்கிரஸ் கட்சியைச்

சேர்ந்த திருமதி பிரியங்கா காந்தி, திரு ரவீந்திர வசந்தராவ் சவான் ஆகியோர் மக்களவையில் உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

***ஸ்வாநிதி***

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டத்தின் கீழ் 67 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. 2020-ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் நகர்புறங்களைச் சேர்ந்த சாலையோர வியாபாரிகளுக்கு உத்தரவாதம் ஏதுமின்றி 50 ஆயிரம் ரூபாய் வரை வங்கி கடன் வழங்கப்படுகிறது. மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு தோக்கன் சாகு இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதைத் தெரிவித்தார். ஸ்வாநிதி திட்டப் பயனாளிகளுக்கு இதுவரை சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

***பியூஷ்கோயல்***

உலக நாடுகளை ஈர்க்க கூடிய, சர்வதேச வர்த்தகம், ஆராய்ச்சி மற்றும் முதலீட்டு கேந்திரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும், பல்வேறு துறைகளில் நாடு கண்டுள்ள வளர்ச்சியே இதற்கு காரணம் என்றும் மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், டிஜிட்டல் இந்தியா இயக்கத்தினால் நாட்டில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். உலகின் டேட்டா கேந்திரமாகவும், செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சி கேந்திரமான உலக மையமாகவும்

இந்தியா மேம்பட்டுள்ளதாக அவர் கூறினார். நாடு முழுவதும் போக்குவரத்து தொடர்புகளில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வருவதில், உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் முக்கிய பங்காற்றி இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றங்களால், இந்நாடுகளுடன், ஏற்கனவே இந்தியாவிற்குள்ள வர்த்தக கூட்டாண்மை பாதிக்கப்பட மாட்டாது என்றார். இங்கிலாந்துடன், வரியில்லா வர்த்தக உடன்பாடு செய்து கொள்வது குறித்த இந்தியாவின் பேச்சு வார்த்தைகள், நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் தொடரும் என அவர் மேலும் கூறினார்.

*திரைப்பட விழா*

கோவாவில், 55-ஆவது சர்வதேச திரைப்பட விழாவின் நிறைவு விழா இன்று மாலை கோலாகலமாக நடைபெறுகிறது. இந்திய திரை உலகின் பிரபலங்கள் பலரும் இவ்விழாவில் பங்கேற்றுள்ளனர். கவுரவம் வாய்ந்த தங்கமயில் விருது உட்பட பல்வேறு திரைத் துறை விருதுகளும் விழாவில் அறிவிக்கப்படுகின்றன. இவ்வாண்டு தங்கமயில் விருதுக்கு 15 திரைப்படங்கள் போட்டியிட்டன. 55-ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கடந்த 9 நாட்களாக பல்வேறு மொழிகள் மற்றும் வகைகளைச் சேர்ந்த மொத்தம் 180 திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

***நமச்சிவாயம்***

புதுச்சேரியில், தாகூர் அரசுக் கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள, தொல்பொருள் அருங்காட்சியகத்தை மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று திறந்து வைத்தார். இந்த அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ள தொல்லியல் பொருட்கள் மற்றும் ஆவணங்களையும் அவர் பார்வையிட்டார். பழங்காலத்திலேயே புதுச்சேரிக்கும் பல்வேறு நாடுகளுக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்ததை இந்த ஆவணங்கள் உறுதிப்படுத்துவதாக அவர் கூறினார். கல்லூரி வளாகத்தில் இத்தகைய அருங்காட்சியகம் அமைவது, சிறப்புக்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார். சென்னை வட்ட தொல்லியல் துறை கண்காணிப்பாளர் திரு முத்தையா காளிமுத்து, கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு கலியபெருமாள், மற்றும் கல்லூரி பேராசிரியர்களும், மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தாகூர் கலைக் கல்லூரியின் அரவிந்தர் வளாக நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தில், அரிக்கமேடு மற்றும் திருவக்கரை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ரோமானியப் பொருட்களும், கல்மரம், புழங்கு பொருட்கள் மற்றும் பானை ஓடுகளும், அரிய வகை தொல்லியல் பொருட்களின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. வாரந்தோறும் சனி-ஞாயிற்றுக் கிழமைகளில் பொது மக்கள் மற்றும் மாணவர்கள் இந்த அருங்காட்சியகத்தை பார்வையிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*தர்மேந்திர பிரதான்*

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் 2 நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளார். இன்று காஞ்சிபுரத்தில், காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலில் அவர் தரிசனம் செய்தார். திருக்கோவில் அதிகாரிகள், பாரம்பரிய முறையில் அமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர். அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள ஸ்ரீ சங்கரா பல்கலைக்கழகத்திலும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்கிறார்.

*எரிசக்தி*

புதுப்பிக்க வல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மொத்த மின் உற்பத்தி திறனில் இந்தியா உலக அளவில் நான்காம் இடம் வகிப்பதாக நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் வி கே சரஸ்வத் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற எரிசக்தி சேமிப்புக் கலன் மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர் காற்றுவிசை மூலமான மின் உற்பத்தி திறனில் இந்தியா 4-ஆம் இடமும், சூரியசக்தி மூலமான மின் உற்பத்தி திறனில் ஐந்தாம் இடமும் வகிப்பதாக கூறினார். நாட்டின் நிகர கார்பன் புகை வெளியீட்டை 2070-ஆம் ஆண்டிற்குள் பூஜ்யமாக குறைப்பது உட்பட, பஞ்சாமிர்த இலக்குகள் என்னும் 5 இலக்குகளை முழுமையாக எட்ட அரசு உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். பசுமை எரிசக்திக்கு மாறுவதில் அணுமின்சாரத்திற்கு முக்கிய பங்கு இருக்கும் என்றும் அவர் கூறினார். எரிசக்தி சேமிப்புக் கலன் வசதிகள் தொடர்பான இம்மாநாட்டில் துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுனர்கள்,

தொழிலதிபர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கலந்து கொண்டு புதுமையாக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் இத்துறையை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கிறார்கள்.

***வானிலை***

நேற்று தென்மேற்கு வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று அதே பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே நீடிக்கிறது. நாகப்பட்டிணத்திற்கு தென்கிழக்கே 310 கிமி தொலைவிலும், புதுச்சேரிக்கு தென்கிழக்கே 410 கிமி தொலைவிலும், சென்னைக்கு தெற்கு-தென்கிழக்கே, 480 கிமி தொலைவிலும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது, அடுத்த 12 மணி நேரத்தில் வடக்கு-வடமேற்கு திசையில், இலங்கை கடலோரப் பகுதிகளை ஒட்டி நகர்ந்து, வரும் 30-ஆம் தேதி காலை வாக்கில், காரைக்காலுக்கும் மகாபலிபுரத்திற்கும் இடையே, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, தமிழ்நாடு-புதுச்சேரி கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இன்று மாலை முதல், நாளை காலை வரையிலான நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக சற்றே வலுப்பெற்று, மீண்டும் வலுவிழக்கவும் வாய்ப்புகள் இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம், செங்கல்பட்டு, விழுப்புரம்,கடலூர், மயிலாடுதுறை, தஞ்சை, நாகூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் அரியலூர் மாவட்டங்களிலும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர தமிழகம் மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் தென்மேற்கு-மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். ஏற்கனவே ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக, நாகப்பட்டிணத்தில் 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 3 செமீ மழை பெய்துள்ளது.

***இஎஸ்ஐ***

ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்யா திட்டத்திற்கான மருத்துவ வசதிகளுடன் இஎஸ்ஐ கழகத்தை ஒருங்கிணைப்பதன் மூலம், தொழிலாளர்களுக்கான மருத்துவ வசதிகளை விரிவாக்கம் செய்ய இஎஸ்ஐ நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. நாடு முழுவதிலும், ஜன் ஆரோக்கியா திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள 30 ஆயிரம் மருத்துவமனைகளில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சேவைகளை தொழிலாளர்கள் பெற இதனால் ஏதுவாகும் என்றும், இஎஸ்ஐ பயனாளிள், மற்றும் அவர்தம் குடும்பத்தினர் சுமார் , 14.43 லட்சம் பேர் இதன் மூலம் பயன் பெறுவார்கள் என்றும் மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் அறக்கொடை சார்ந்த மருத்துவமனைகளும், இஎஸ்ஐ தொழிலாளர்கள் சிகிச்சை பெறத் தகுந்த மருத்துவமனைகளாக அங்கீகரிக்கப்படும் என அமைச்சகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***கீதா உற்சவ்***

அரியானா மாநிலம் குருஷேத்திரத்தில் கீதா மகோத்சவ் என்னும் சர்வதேச பகவத் கீதை விழா இன்று தொடங்கி உள்ளது. விழா தொடங்குவதை குறிக்கும் வகையிலான கீதா மராத்தான் ஓட்டத்தை மாநில அமைச்சர் திரு கிருஷ்ணகுமார் பேடி தொடக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார். குருஷேத்திரா வளர்ச்சி வாரியம் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. சர்வதேச பகவத் கீதை

விழாவின் மற்றொரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கைவினைக் கண்காட்சியை, அரியானா ஆளுநர் திரு பண்டாரு தத்தாத்ரேயா இன்று தொடக்கி வைக்கிறார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் பாதுகாப்பு திறன்கள் உலக அளவில் கவனம் பெற்றுள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்றும் இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

புதுச்சேரியில், தாகூர் அரசு கலைக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள, தொல்பொருள் அருங்காட்சியகத்தை மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் இன்று திறந்து வைத்தார்.

வங்க கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வரும் 30-ஆம் தேதி காலை, காரைக்கால்-மகாபலிபுரம் இடையே, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக, கரையை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

--------------------------